
# தமிழ் முரசு

முரசு: 3
ஒலி: 8
1985 ஆனி

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்



வாருங்கள்!

பகைவனை ஒழிப்போம்

வரலாறு படைப்போம்

TAMOUL MOURASSOU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்




தமிழ் முரசு - 44

## ஈழம் என்பதே முடிந்த முடிபு.

ஈழப் போராட்டத்தின் சிவப்புப் பக்கங்கள் எம் மக்களையும், வேங்கைகொண்ட போராளிகளையும் இரத்தத்தால் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே முன்னெப்போதும் இல்லாதவகையில் ஈழப் போராட்டத்தை தள்ளிவிடுவதற்கான சதிக் கிழிகள் முடுக்கப்பட்டுள்ளன. எமது பாசபூமியில் பாசிச அரசின் கூலிப்படைகள் வேட்டை நாய்களாக எம் மக்களின் உயிர்வளங்களைக் குதறி இரத்தத்தைக் குடிக்கும் இந்த வேளையிலே, எமது நேச தேசத்தில் சிந்துகின்ற குருதியெல்லாம் ஈழத்தைத் தவிர்த்து வேறு எந்த மாற்றீடும் இல்லையென்று சத்தியம் செய்கின்ற இந்த வேளையிலே பதவி மோகம் கொண்ட தமிழ்த் தரகு முதலாளித்துவம் மீண்டும் போராட்டத்தைப் பின் தள்ளும் பேச்சுவார்த்தை நாடகங்கள் பற்றிய அறிவித்தல்களை ஆரம்பித்துள்ளது.

அடக்குமுறை அவலங்களில் வெந்து துடிக்கும் ஈழமக்களின் வாழ்க்கையில் விடியலைப் பிரசவிக்கும் நோக்குடன் முற்றுமுழுதாக தம்மைப் போராட்டத்தில் அர்ப்பணித்து புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் மேல் ஆக்கிரமிப்பு வெறிநாய்களுக்கு புதியபாடத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு ஈழத் தேசிய விடுதலை முன்னணியும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்த கூட்டமைப்பு, ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் ஐக்கியத்தின் மேல் அனைத்து மக்களின் நெஞ்சங்களில் மகிழ்ச்சி விதைகளைத் தூவி, விடுதலையின் தூரத்தைக் குறுக்கி மக்களை அணிவகுக்க ஆரம்பித்திருக்கும் இவ்வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே ஈழப் போராட்டம் இருவிதமான சதிகளை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.

ஈழப்போராட்டத்தை நசுக்க சிறீலங்கா எடுத்து வரும் சதிகள் முதலாவதானவை. இவற்றை நாம் அறிவோம். ஆனால் இதைவிட ஆபத்தானவை நாம் இங்கே குறிப்பிடும் இரண்டாவது வகைச் சதிகள். இதனை மக்களுக்கு அவலம் ஏற்படுத்திவிட்ட உடனே தாம் தப்பித்துக் கொண்டு தமிழகத்தில் சகல சௌகரியங்களையும் அனுபவித்து வரும் தமிழ் தரகு முதலாளித்துவத் தலைமையும் அவர்களால் பதவி ஆசைகாட்டி விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட எதிர்ப் புரட்சியாளர்களும் கட்டவிழ்த்து வருகிறார்கள்.

இவர்கள் தமது சதிகளை இரண்டு கட்டங்களாகச் செயற்படுத்தி வருகிறார்கள். ஒன்று ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு அதற்குக் குறைந்த பட்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்ற பிரமையை ஏற்படுத்துவது. இரண்டாவது தம்மிடையே உள்ள எதிர்ப்புரட்சியாளர்களின் துணையுடன் ஆயுதப் போராட்டத்தில் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராட வக்கற்றவர்கள் புரட்சிகர விடுதலை இயக்கங்களின் போராளிகளைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்தும், கொலை செய்தும் இவ்வியக்கங்களை பிரட்டி தமது வழிக்கு வசச் செய்யும் சதி நடவடிக்கை.

ஆனால் மக்களோ ஒரு புனிதமான இலட்சியத்துக்காக உறுதியாக நின்று போராடும் போராளிகள் இந்த சதிகளுக்கு அஞ்சப் போவதில்லை. துப்பாக்கிகள் அனைத்தும் பொது எதிரிக்கு எதிராக என்ற எமது கொள்கையிலோ அன்றி ஈழம் ஒன்றே முடிந்த முடிவு என்ற எமது இலட்சியத்திலோ மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை. இறுதி வெற்றிவரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மக்களும் விடுதலைப் போராட்டமும்



இன்று ஈழமக்கள் சிங்கள முதலாளித்துவ சோவனிச அரசாங்கத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருவது வெளிப்படையான உண்மையாகும். தமிழ் பேசும் மக்களின் சகல சுதந்திரங்களும் பறிக்கப்பட்ட நிலையில் தமது நாளாந்த உணவிற்காகக்கூட தமது தொழில்களைச் செய்யமுடியாமல் மிகவும் விரக்தியுற்ற நிலையில் வாழ்கின்றனர். மன்னர், முல்லைத்தீவு போன்ற இடங்களில் சிறீலங்காவின் சோவனிச அரசாங்கத்தின் ஏவல்நாய்களான இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான அராஜகச் செயல்களினால் பெருந்தொகையான மக்கள் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் உயிர் தப்பினாற் போதுமென்ற நிலையில் தமது உடமைகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டு அகதிகளாக இந்தியாவிற்கு வந்துகொண்டிருக்கிறார்கள். ஈழத்திலே சிறீலங்கா இராணுவமானது தேடுதல் வேட்டையென்ற போர்வையில் வீடுகளிலே கொள்ளையடித்தும் அப்பாவி மக்களைக் கொலைசெய்தும் எமது சகோதரிகளின் கற்பைச்சூறையாடியும் வருகிறது. இத்தோடல்லாமல் ஈழமண்ணிலே சிங்கள மக்களைக் குடியேற்றி அவர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கி வருகிறது. இந்நிலையை நாங்கள் தொடரவிடுவோமானால் எமது ஈழ மண்ணை முற்றாக இழந்தவர்களாக அந்நிய நாடுகளிலே அகதிகளாக அலைய வேண்டிய அபாயகரமான நிலையை நாம் உணர வேண்டும்.

ஈழக் கோரிக்கையானது 1977 ம் ஆண்டிலே வலுவடையவாரம்பித்தது. 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி இதனை ஒரு சர்வசன வாக்கெடுப்பாக நோக்கும்படி தமிழ் பேசும் மக்களைக் கோரியது. மக்களும் இக்கோரிக்கைக்குத் தமது பேராதரவை வெளிப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தினர். பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியதுடன், வல
து சாரி முதலாளித்துவ சந்தர்ப்பவாத தமிழர் விடுதலைக்கூட்
டணியானது ஈழவிடுதலைக்கான எவ்வித நடவடிக்கைகளையும்
மேற்கொள்ளவில்லை. ஈழ மண்ணிலே சிங்கள மக்களைக் குடி
யேற்றிய போதெல்லாம் பாராளுமன்றத்திலே கூக்குரல் எழு
ப்பியதுடன் நின்றுவிட்டார்கள். முடிந்த முடிபு தமிழ் ஈழம் என்
று கூறியவர்கள் எவ்வித அதிகாரமுமற்ற மாவட்ட சபையை ஏ
ற்றுர்கள். அரசாங்கத்துடன் பல மாதங்களாகப் பேச்சுவார்
த்தை நடாத்தி காலத்தை வீணுக்கிறுர்களேயன்றி ஈழ விடுதலை
க்காக ஒரு அடியேனும் முன்னெடுத்து வைத்தார்களில்லை. இத
ுல் இவர்களுடைய முதலாளித்துவ சந்தர்ப்பவாதத்தன்மையை
மக்கள் புரிந்துகொண்டார்கள்.

இந்நிலையில் ஈழ விடுதலையை வென்றெடுப்பதற்காகப்
பல்வேறு இயக்கங்கள் தோன்றின. விடுதலை அமைப்புக்கள் யா
வும் ஈழவிடுதலையையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு
செயற்பட்டாலும் அமைப்புகளில் ஏற்பட்ட பிளவுகள் விடுதலைப்
போராட்டத்தின் வேகத்தை மந்தப்படுத்தியது. அமைப்புக்களு
க்கிடையில் ஏற்பட்ட போட்டிகளினுல் பிரச்சினைகளைப் பேசித்
தீர்ப்பதற்கு மாறுக துப்பாக்கி முனையிலே தீர்க்க முற்பட்டா
ர்கள். இந்நிகழ்வானது மக்கள் மனதில் விரக்தியையும் ஈழவிடு
தலை அமைப்புக்களின் மீது ஓர் காழ்ப்புணர்வையும் ஏற்படுத்தி
யது. இவ்வேளையில் விடுதலை அமைப்புக்கள் ஓர் விடயத்தைக்
கவனத்திற் கொள்ள வேண்டும். ஈழத்திலே ஓர் புரட்சியைத்
தோற்றுவிக்க வேண்டும். இப்புரட்சியில் மக்களைத் திரட்டி அ
ணிவகுக்க வேண்டும். தோழர் மா ஓ சே துங் கூறுகிறுர் "பு
ரட்சி என்பது மாலை விருந்தல்ல" இக்கருத்தை நாம் கவனத்
திற் கொள்ளவேண்டும். ஈழவிடுதலைப் போராட்டமானது ஓர்
மக்கள் போராட்டமாக அமைய வேண்டும். மக்கள் முன் புர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்சிகரக் கருத்துக்களை விளக்கிப் போராட்டத்தின் பால் ஈர்க்க வேண்டும். கால்மார்க்ஸ் கூறுகிறர் "கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் அது சக்தியாக உருவெடுக்கும்." இச்சக்தியானது போராட்டத்தை வலுப்படுத்தும். விடுதலைப்போராட்டத்தின் அவசியத்தை மக்கள் புரிந்து கொள்வார்கள். போராட்டத்திலே தம்மைப் பிணைத்துக் கொள்ளுவார்கள். இன்றைய நிக்கரகுவா மக்களின் மனுேவுறுதியினுல் நிக்கரகுவா புரட்சிகர சான்டினிஸ்திய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் எடுத்த முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன. தமது புரட்சிகர அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் மக்கள் உறுதியாகவுள்ளனர்.

புரட்சியானது பாட்டாளி மக்கள் மூலமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அவர்கள் தான் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுக்கக் கூடியவர்கள். தோழர் மா ஓ சே துங் விவசாயப் பாட்டாளிகள் மூலமாகப் போராட்டத்தை முன்னெடுத்து சீனவிலே புரட்சியை ஏற்படுத்தினர். தோழர் லெனின் தொழிலாளிகள் மூலமாகப் போராட்டத்தை ஆரம்பித்து சோவியத் யூனியனிலே புரட்சியை ஏற்படுத்தி ஒரு பாட்டாளிவர்க்கச் சர்வாதிகார அரசாங்கத்தை ஏற்படுத்தினர். ஏழைத் தொழிலாளர்கள் தான் அந்நாட்டின் முதுகெலும்பு. அவர்கள் தான் உறுதியான போராளிகள். கால் மார்க்ஸ் கூறுகிறர் "ஒரு இனத்தின் விமோசனத்திற்கான போராட்டம் கூர்மையடைந்த நிலையில் அப்போராட்டத்தின் அச்சாணியான பாட்டாளி வர்க்கத்துடன் நடுத்தர வர்க்கத்தினர் சேர்ந்துகொள்ளுவார்கள்." இக்கூற்றை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இதனைக் கருத்திற் கொண்டு நாமும் ஈழத்திலே ஓர் புரட்சிக் கட்சி மூலம் போராட்டத்தைச் சரியான திசையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்துச் சிங்கள ஏகாதிபத்திய இனவெறி அரசாங்கத்தை ஈழ மண்ணிலே தோற்கடித்து ஈழ மக்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலையைத் தோற்றுவிப்போம் என உறுதி கொள்வோம்.

ஐக்கியப்படுவோம் போராடுவோம் வெற்றிபெறுவோம்.

- வரதன் -

# சிவப்பு வணக்கம்



மக்கள் விடுதலைப்படையின் தளபதி சின்னவன்

காரைநகர் கடற்படைத் தளத்தை தகர்த்து வெற்றியை வாரித்தந்து வீர மரணம் அடைந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களான சின்னவன், கணேஸ், வேணு, விஜயன், குணம், தோழி ஷோபா ஆகியோர்க்கு எமது சிவப்பு வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## காரைநகர் கடற்படைத்தளம் மக்கள் விடுதலைப் படையால் தகர்க்கப்பட்டது!

3.05.1985 அன்று இரவு 9 மணியளவில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் பிரிவான மக்கள் விடுதலைப் படை (PLA) சிறீலங்கா கடற்படையின் காரைநகர் தளத்தை கடல், நிலத் தாக்குதல்கள் மூலம் தகர்த்தது. ரொக்கெட்டுக்கள், மோட்டார்கள் சகிதம் மிக நீண்ட நேரம் - 9 மணி நேரம் - நிகழ்ந்த இத்தாக்குதலில் பெருமளவு கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டதுடன், முகாமும் முற்றாக சேதப்படுத்தப்பட்டு பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. மேற்படி தாக்குதல் நடந்த வேளையில் குருநகர் இராணுவ முகாமிலிருந்து இராணுவம் வெளிவராவண்ணம் மக்கள் விடுதலைப் படை ஒரு தாக்குதலையும், யாழ். பொலிஸ் நிலையம் - கோட்டைப் பகுதியிலிருந்து பொலிசார் வெளியேறாவண்ணம் தோழமை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னுமொரு தாக்குதலையும் நடத்தியது குறிப்பிடத்தக்கது. முதல் தடவையாக பெண் போராளிகள் பங்குபற்றிய காரைநகர் தாக்குதலில் பெண் போராளியாகிய தோழி றோபா, தோழர் சின்னவன் உட்பட ஆறு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

'காரைநகர் கடற்படை யுத்தம்' ஆங்கில சரித்திரத்தில் பதினெழாம் நூற்றுண்டில் நடந்த ரிறபல்கார் (Trafalgar) கடற்படை சண்டை போல இலங்கை வரலாற்றில் இடம் பெறும். பத்திரிகைத் தணிக்கை நீங்கி உள்ளதை உள்ளவாறு அறியும் சாதாரண நிலைகிட்டியதும் இப்போரின் பூரண விளைவு வெளியாகும்.

'ஈழநாடு' 7.05.85 ஆசிரிய தலையங்கம்.

உண்மையான தகவல்களை மதிப்பிட முடியுமானுல் இளைஞர்களின் இறமைக்கு பல சாதனைகள் சாட்சி சொல்லும்.

ஆனுல் இதனை மழுப்பி இராணுவத்தீர்வில் தொடர்வது எத்துணை ஆபத்தானதென்பதை காரைநகர் கடற்படை, யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத் தாக்குதல்கள் போன்ற உண்மை நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

'ஈழநாடு' 16.05.85 ஆசிரியத் தலையங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான ஆயுதப் - போராட்டம் முனைப்படுகிறது.

ஈழ மண்ணை ஆக்கிரமித்து அப்பாவி மக்களைக் கொலை செய்து அராஜக ஆட்சி நடத்தும் சிறீலங்கா கூலிப்படையினருக்கெதிரான ஈழப் போராளிகளின் தாக்குதல்கள் தீவிரமாக முடுக்கப்பட்டுள்ளன. 2.05.85 அன்று ஜோரில் எமது தோழமை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் 4 கடற்படையினரைக் கொன்றனர். 4.05.85இல் மன்னாரில் இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்த இருவர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர். 9.05.85 அன்று வல்வெட்டித் துறையில் விடுதலைப் புலிகளால் லால் மெண்டிஸ் என்ற இராணுவ மேஜர் உட்பட 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் விடுதலைப் புலி இயக்கத் தோழர் ஜெயம் வீரமரணம் அடைந்தார். 10.05.85 அன்று மன்னார் பொலிஸ் நிலையம் வெற்றிகரமாகத் தகர்க்கப்பட்டு பலர் கொல்லப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 1.06.85 அன்று கொச்சவெளி பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதுடன் கடற்படை முகாமும் தாக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்திலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இவை தவிர எமது தோழமை இயக்கங்களான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கொக்காவில் உப தொலைக் காட்சி அஞ்சல் நிலையத்தின் மீது ஒரு தாக்குதலையும், ஈழப்புரட்சி அமைப்பு மன்னம்பிட்டிப் பாலத்தைத் தகர்க்கும் ஒரு தாக்குதலையும் நிகழ்த்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. அதே வேளையில் நிக்கவெரெட்டியப் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு வங்கி கொள்ளையடிக்கப்பட்டதற்கு தமிழ் மக்கள் விடுதலைக் கழகமே காரணம் என சிறீலங்கா அரசு கூறியுள்ளது. எனினும் ஐக்கியத்தின் மூலம் ஆயுதப் போராட்டத்தில் புதிய வரலாறு படைக்கத் தொடங்கியிருக்கும் ஈழத் தேசிய விடுதலை முன்னணி - தமிழீழ விடுதலைப் புலிகள் கூட்டமைப்பின் தாக்குதல்கள் இராணுவத்தரப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுவார்த்தைகள் தொ......டர்......கின்...றன.

'ஈழம்' தவிர்ந்த வேறு எந்தத் தீர்விலும் தீர்க்க முடியாத இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்த இந்திய - சிறிலங்கா பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் ரொமேஷ் பண்டாரி சிறிலங்கா வந்து ஜெயவர்த்தனாவையும் இராஜதந்திரிகளையும் சந்தித்ததையடுத்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தன அவரது பாதுகாப்பமைச்சர் அத்துலத் முதலி சகிதம் இந்தியா சென்றுள்ளார்.

## கிழக்கு மாகாணச் சம்பவம் 'திட்டமிட்டது' என பலர் குற்றச் சாட்டு.

காலா காலமாக தோள் சேர்ந்து வாழ்ந்த தமிழ்-முஸ்லீம் மக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களுக்குக் காரணம் சிறிலங்கா அரசும் அதன் பயங்கரவாத போதகனான இஸ்ரேலிய மொசாட்டும் என்பது அம்பலமாகியுள்ளது. இதனை தற்போது இப்பகுதிகளில் வாழும் தமிழ்-முஸ்லீம் மக்கள் பூரணமாகவே உணர்ந்துள்ளனர். இப்பகுதிகளில் நடந்த வெறியாட்டங்களில் பெரும்பாலானவை சிறிலங்காவின் விசேட பொலிஸ் கொமாண்டோக்களாலேயே நிகழ்த்தப்பட்டன என சிறிலங்காவின் அமைச்சர்களான தேவநாயகம், ராஜதுரை ஆகியோரும் மாவட்ட அமைச்சர் திருமதி ரங்கா பத்மநாதனும் கூறியுள்ளனர். கொழும்பிலிருந்து பெருமளவு கொண்டர்கள் அரச வாகனங்களில் இப்பகுதிகட்கு அனுப்பப்பட்டதாக அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார். மேற்படி தமிழ்-முஸ்லீம் மோதல்களில் வெளிநாட்டுக் கரம் ஒன்று சம்பந்தப்பட்டிருப்பதாக இந்தியப் பாராளுமன்றத்தில் அமைச்சர் ஒருவர் [illegible] குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்காவில் - மக்களோ பட்டினியை நோக்கி அரசின் பாதுகாப்புச் செலவுகளோ உயர்கின்றன.

பொருளாதாரப் புதைகுழியில் ஸ்ரீலங்காவின் மக்கள் மேலாகப் புதையும் நாள் நெருங்கும் இந்த வேளையில் அரசின் பாதுகாப்புச் செலவுகள் மலையாய் உயர்கின்றன. வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதை விட மேலதிகமாக 200 கோடி ரூபா செலவிடப்படவிருப்பதாக ஸ்ரீலங்கா அமைச்சர் ரோனி த மெல் கூறியுள்ளார். ஏற்கனவே வரவு செலவுத் திட்டத்தில் 85ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவீனங்களுக்கு 360 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. நாள் ஒன்றுக்கு பாதுகாப்புச் செலவாக ஸ்ரீலங்கா அரசு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவழிக்கிறது என்று அமைச்சர் கூறியுள்ளார்.

## அநுராதபுரப் படுகொலைகள்.

14.05.85 அன்று ஆயுதம் தாங்கிய இளைஞர் குழு ஒன்று அநுராதபுரத்தில் சிங்களப் பொது மக்கள் மீது நடத்திய தாக்குதலில் 140க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது ஈழப் போராளிகளால் நிகழ்த்தப்பட்டதாக அரசாங்கம் சுமத்திய குற்றச்சாட்டை நிராகரித்த ஈழ விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு இச்சம்பவம் தமிழ்-சிங்கள மக்களிடையே உள்நாட்டு யுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசு செய்த திட்டமிட்ட சதியே எனக் குற்றஞ்சாட்டியுள்ளன. இச்சம்பவத்தின் பின் தென்பகுதியில் அப்பாவித் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் கடைகள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும் உள்ளன. எது எப்படியிருந்த போதிலும் சிங்கள மக்களிடையே இத்தாக்குதல் சம்பவம் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவான போராட்டத்தில் கலைஞர் கைது செய்யப்பட்டு விடுதலை!

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இலங்கைத் தமிழர்களது பிரச்சனையில் இந்திய மத்திய அரசின் அசமந்த போக்கைக் கண்டித்தும் தி.மு.கழகம் தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக அரச அலுவலகங்களின் முன் மறியல் போராட்டங்களை நடத்தி வருகின்றது. கடந்த மாதம் 23ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வகையில் தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டு தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார். கலைஞர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தி.மு.க ஆதரவாளர்கள் இருவர் தீக்குளித்து மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

## இலங்கையில் அப்பாவி மக்கள் படுகொலை! பிரித்தானிய பாராளுமன்றத்தில் அறிக்கை!

"இலங்கையிலே இராணுவத்தினர் அப்பாவி மக்களை படுகொலை செய்தும், சித்திரவதைக்குள்ளாக்கியும் வருகின்றனர். காவலில் வைக்கப்பட்டுள்ள மக்கள் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர். இத்தகைய கேடான இராணுவத்தினரே இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் – இவ்வாறு இலங்கை வந்த ஒரு பிரித்தானிய பா.உ.க்கள் பிரித்தானிய பாராளுமன்றத்தில் அறிக்கை விடுத்துள்ளனர்.

---

தோழர்களே!

தமிழ் முரசுடனான அனைத்துத் தொடர்புகளுக்கும் . . . ——


The Editor,
**"TAMIL MURASU"**
TAMIL EELAM LIBERATION COUNCIL. (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் கண்காட்சி- "அகதிகள்"

EXHIBITION ON REFUGEES

EXPOSITION SUR LES REFUGIES



EALAM IST AUSGEBLUTET ES GIBT NICHTS MEHR ZU HOLEN DOCH DIE GIER DES WOLFES IST UNER-SÄTTLICH

AUSSTELLUNG UEBER FLUECHTLINGE



சர்வதேச அரங்கில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது தலைமை பீடமான ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தினூடாக பாரிய அளவில் ஈழப் பிரச்சாரத்தை செய்து வருகின்றது. அந்த வகையில் சுவிற்சலாந்திலுள்ள ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத் தோழர்கள் 'அகதிகள்' என்ற தலைப்பில் ஈழமக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களைச் சித்தரிக்கும் கண்காட்சி ஒன்றை கடந்த மாதம் 17, 18, 19ம் திகதிகளில் ஒழுங்கு செய்திருந்தனர். பெருந்தொகையானோர் பார்வையிட்ட இக்கண்காட்சி மூலம் வெளிநாட்டவர்கள் மத்தியிலே ஈழப்பிரச்சாரத்தை செய்ய முடிந்ததுடன் அவர்களது ஆதரவையும் திரட்ட முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரச் சம்பவம்......

# ஈழ விடுதலை இயக்கங்கள் கூட்டாகக் கண்டனம்.

**EROS - EPRLF - TELO - LTTE -**

ஸ்ரீலங்கா - அநுராதபுரத்தில் சிங்களப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் எங்கள் அமைப்புக்களின் ஆயுதப் படைப் பிரிவுகளுக்கும் சம்பந்தம் இல்லை. இறந்த, காயமடைந்த சிங்கள மக்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அநுராதபுரத்தில் நடந்த சிந்தனை அற்ற வன்செயலை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

நாங்கள் ஸ்ரீலங்கா அரசையும், தமிழ்ப்பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு, தமிழ் மக்களைக் கொன்று குவித்து வரும் ஸ்ரீலங்கா இராணுவத்தையும், பொலிசாரையும் எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தி வருகிறோம். ஸ்ரீலங்காவின் உழைக்கும் மக்கள் மீது எமக்கு எப்போதும் அனுதாபம் உண்டு. எங்கள் ஆதரவு அவர்களுக்கு என்றும் உண்டு. ஏனெனில் ஸ்ரீலங்காவின் சர்வாதிகார அரசை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் அவர்கள் எங்களது புரட்சிகரக் கூட்டாளிகள்.

ஈழ விடுதலை இயக்கங்களின் ஆயுதமேந்திய போராட்டத்திற்கு எதிர் விளைவாக ஒன்றும் அறியாத அப்பாவித் தமிழ் மக்களை இலங்கை அரசு கொன்று குவித்து வருகிறது. ஒவ்வொரு முறை கொரில்லாத் தாக்குதல் நடந்த பிறகும் காட்டுமிராண்டித்தனமாக அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுகின்றனர். இப்படி ஒட்டு மொத்தமாக ஒரு சமுதாயத்திற்கு தண்டனை வழங்கும் போக்கிற்கு நிரந்தரமான சாட்சியாக 83-யூலைப் படுகொலைகள் இடம் பெற்றன. கடந்த சில வாரங்களாக இக்கூட்டுக் கொலைகள் தாங்கமுடியாத நிலையை எட்டி உள்ளன. தமிழ் மக்கள் அனைவரையும் கொன்று ஈழத் தமிழர் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காண ஸ்ரீலங்கா அரசு நினைக்கிறது. **சிங்கள மக்களையும், தமிழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையும் பேரழிவுக்கு வழிவகுக்கும் உள்நாட்டுப் போரில் தள்ளிவிட ஸ்ரீலங்கா பாசிச அரசு செயற்பட்டு வருகிறது.

ஒட்டுமொத்தமாக தமிழ் சமுதாயத்தைக் கொன்றுகுவிக்கும் போக்கை ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து கடைப்பிடித்தால் வன்முறை மேலும் வெடிப்பதற்கு நாங்கள் பொறுப்பாக இயலாது. தமிழினத்தை முற்றாக அழிக்க நினைக்கும் ஸ்ரீலங்கா அரசின் பேரினவாதச் சூழ்ச்சிக்கு இரையாக வேண்டாம் என்று சிங்கள மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஈழப் புரட்சி அமைப்பு. (EROS)
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)
தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE)

17.05.1985

"ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்கு எதிரான அரசியல் போராட்டம் சிங்கள மக்கள் மத்தியிலும் மறைமுகமாகத் திரட்சி அடைந்து வருகின்றது. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்குச் சக்திகளிடம் வழிகாட்டித் துணை நின்று பலப்படுத்த வேண்டியது எமது கடமையாக உள்ளது....."

தோழர் பத்மநாபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாம்: புரட்சிப் பாதையில் பத்து வருடங்கள்



வியட்நாம் - மிக நீண்ட காலம் காலனித்துவ வெறியாளர்களின் காலடிகளின் கீழ் நசியுண்டு, கயவர்கள் வீசிய குண்டுகளால் கந்தக பூமியாக மாறி, கண்ணீரையும், செந்நீரையும் சுமந்து நின்ற தேசம்.

நீண்ட... நெடிய போர்களைச் சந்தித்து, இலட்சக் கணக்கான மக்களைக் களப்பலி கொடுத்து, இன்னமும் இரத்தக் காயங்களுடன் தனது ஜீவிதத்தைத் தொடர்ந்தாலும் அடக்குமுறைக்கு எதிராக, ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக வீரமும் திடமும் கொண்டு உயர்ந்து நிற்கும் தேசம்.

தன்மீது ஆக்கிரமிப்புச் செய்த பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு, புதிய புரட்சிகர இராணுவ பலாத்காரப் பாடத்தைப் போதித்து புறமுதுகு காட்டி ஓடச்செய்து புரட்சிக் கொடியை உயர உயரப் பறக்கச் செய்துள்ள தேசம்.

எத்தகைய நவீன ஆயுதங்களாயிருந்தாலென்ன, இராணுவ வல்லமையாக இருந்தாலென்ன தேசவிடுதலையில் பற்றுக் கொண்ட மக்களின் உறுதியான போராட்டத்தின் முன்னால் இவை தோற்றுப்போய்விடும் என்ற உண்மையை இந்த உலகிற்கு தனது மக்களின் இரத்தத்தால் எழுதிக் காட்டிய தேசம்.

இந்த தேசம் தன்னுடைய புரட்சியின்... பூரண விடுதலையின் பத்தாவது ஆண்டு நிறைவை செங்கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டாடுகிறது. பத்துவருடகாலமாக தன்மீது விதிக்கப்பட்ட ஏகாதிபத்தியத் தடைகள், தன்னைச் சுற்றியுள்ள சதிகள் அனைத்தையும் தகர்த்து தலையை உயர்த்தி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 ஏப்ரல் 30 - மே 1 இல் தென் வியட்நாமும் விடுதலை செய்யப்பட்டதுடன் வியட்நாமின் விடுதலை பூரணப்படுத்தப்பட்டது. இந்த நூற்றாண்டில் முதல்தடவையாக வியட்நாமிய தேசம் முழுமையாக எந்தக் காலனித்துவவாதிகளின் பிடியும் இல்லாதவாறு விடுவிக்கப்பட்டது.

காலனித்துவ ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து வியட்நாம் விடுவிக்கப்பட்ட போதும் தொடர்ச்சியாக அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் சர்வதேசக் கூட்டாளியாகிய சீனாவும், இவர்களது கைப்பொம்மை அரசுகளும் வியட்நாமின் இறைமையை நசித்து வந்தன. வியட்நாமைச் சுற்றி சதிவலைகளைப் பின்னின. வியட்நாமுக்குள் ஊடுருவல்களை நடத்தின. தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், கம்போடியா என்று வியட்நாமைச் சுற்றியிருந்த நாடுகள் ஏகாதிபத்தியங்களினால் விலைக்கு வாங்கப்பட்டு விடுதலையடைந்த வியட்நாமின் வெற்றி கேள்விக்குறியாக்கப்பட்டது.

ஆனால் வியட்நாம் மக்கள் கலங்கவில்லை. வியட்நாமின் புரட்சிகர அரசு அசையவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமில் பொழியச் செய்த 14 மில்லியன் தொன்கள் வெடிமருந்துக்கும், வீசிய 4 இலட்சம் தொன் நாபாம் (NAPALM) குண்டுகளுக்கும், 11 மில்லியன் கலன்கள் விஷ வாயுவுக்கும் அசையாத தேசம்..... பாடம் படிப்பிக்க முற்பட்ட சீனாவுக்கு பாடம் கற்பித்த தேசம், தன்னுடைய புரட்சியை கம்பூச்சியா, லாவோசிற்கும் விஸ்தரித்து செங்கொடிகளை இந்தோசீனாவில் உயர்த்தி புரட்சியின் புதிய அத்தியாயங்களை வியட்நாம் எழுதியது.

வரலாற்றில் மறக்கமுடியாத இராணுவத் தோல்வியை வியட்நாமில் சந்தித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் என்ற புரட்சிமலரை துவம்சம் செய்ய தனது தந்திரங்களை மாற்றியது. தனது கூட்டாளியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவுடன் இணைந்து பொருளாதாரத் தடைகளை வியட்நாமுக்கு எதிராக ஏற்படுத்தியது. அமெரிக்க ஏகாதிபத்தியம் 1975ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வியட்நாமிற்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதித்து அமுல் நடத்திவருகிறது. 1978இன் மத்திய பகுதியிலே சீன வியட்நாமுக்கான தனது சகல உதவிகளையும் நிறுத்தியது.

பொருளாதார நெருக்குவாரத்தில் சிக்கித் தவிக்கும் வியட்நாம் தங்கள் காலடிகளில் வந்து விழும் எனக் காத்திருந்த அமெரிக்க-சீனக் கூட்டுக்கனவு உடைத்தெறியப்பட்டது. புரட்சியின் காவலனான சோவியத் யூனியன் தனது நேசக் கரங்களால் வியட்நாமை அரவணைத்தது.

வியட்நாம் மக்களின் புரட்சிப் பாதையில் புதிய ஒளி பரவத் தொடங்கிவிட்டது. அனைத்துத் தடைகளையும் தகர்த்து அவர்கள் முன்னேறுகின்றனர். உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்ட அவர்கள் 1984ஆம் ஆண்டில் 17 மில்லியன் தொன்கள் தானிய உற்பத்தியை மேற்கொண்டு சாதனை புரிந்துள்ளார்கள். கைத்தொழில் துறையில் சோவியத் யூனியனின் உதவியுடன் அபிவிருத்தி பெற்றுவரும் வியட்நாம் கடந்த ஆண்டுகளில் தேவைப் பொருட்களின் வெளியீட்டில் கணிசமான அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

தமக்கெதிரான சீன, தாய்லாந்து சுற்றிவளைப்புகளுக்கு தகுந்த பதிலடி கொடுத்து, கம்பூச்சிய முற்போக்கு அரசைக் கவிழ்க்க முனையும் முதலாளித்துவக் கைக்கூலிகளை விரட்டியடித்து, கம்பூச்சிய, லாவோஸ் மக்களுடன் கைகோர்த்து புரட்சிப் பாதையிலே வெற்றிகரமான பத்து வருடங்களை பலத்த இன்னல்களுக்கும் மத்தியில் கடந்திருக்கும் மக்கள் தொடர்ந்து முன்னேறுவார்கள் - இந்தோ சீன முழுவதையும் சிவப்பாக்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டாளி வர்க்க சிந்தனையின் தடத்தில் உதயமாகப் போகும் புரட்சிகர ஈழம்

## ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் மேதின முழக்கம்




ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் மே தினக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்தும் தோழர் அந்தோனிப்பிள்ளை.

ஈழத்து அரசியலில் பாட்டாளி வர்க்க சிந்தனையின் விழிப்பு கடந்த காலங்களில் நன்கு பிரகாசமடையத் தொடங்கியிருக்கிறது. இந்த நவ சிந்தனையின் நெறியில் கட்டியெழுப்பப்படுவதே உண்மையான ஈழமாக இருக்க முடியும். இந்தக் கருத்து கடந்த மாதம் பாரிசில் நடைபெற்ற ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் (ENLF) மே தினப் பொதுக் கூட்டத்தில் பலமாக ஒலித்தது. உரையாற்றிய தோழர்கள் பாட்டாளி வர்க்க சிந்தனை ஈழப் போராட்டத்திற்கு எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PORTE DE CHOISY இல் நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்திற்கு தோழர் அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார். பாரிஸ் வாழ் தமிழ் பேசும் மக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் பாட்டாளி வர்க்கம் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பலவித கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டன.

"ஐரோப்பிய முதலாளித்துவத்தின் சுரண்டல் இலங்கையை விட்டு இன்னமும் முழுமையாக நீங்கவில்லை" என்பதை தோழர் தேவதாசன் சுட்டிக் காட்டினார். "தரகு முதலாளித்துவம் தனது நலனுக்காக இலங்கைத் தொழிலாளர்களைக் கூறுபோட்டு வைத்திருக்கின்றது. அத்துடன் அவர்களது உழைப்பு சக்தியை ஐரோப்பிய நாடுகளிற்கு இன்றுவரை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது" என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

தோழியர் திருமதி நித்தியானந்தன் உரையாற்றும் போது - "மனிதாபிமானமற்ற முறையில் ஈழப்-பெண்களின் உழைப்புச் சக்தி உறிஞ்சியெடுக்கப்படுகின்றது" - என்று கூறினர். "சமூகரீதியான கட்டுப்பாடுகள் ஈழத்தில் பெண்கள் உரிமையை அடக்கி வைத்திருக்கின்றன. அவர்கள் எதிர்கொள்ளும், உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகள் நிறைய உள்ளன. தொழிற்சங்கரீதியாக இணையும்போதுதான் அவர்களுக்கு சரியான ஒரு விடிவுகாலம் பிறக்கும்" என விளக்கமளித்தார்.

"இலங்கையில்வாழும் மலையகத் தொழிலாளர்கள் உலகத் தொழிலாளர்களிலிருந்து மிகவும் வித்தியாசப்பட்டவர்கள்" என்று கூறிய தோழர் சுரேந்திரன், "அவர்களின் அடிப்படைத் தேவைதானும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை" என்றார். "இலங்கைப் பொருளாதாரத்தில் 70% வருமானத்தை ஈட்டித்தருகிறார்கள், ஸ்தாபனரீதியாக இணைந்திருக்கிறார்கள் எனினும் அவர்களது வாழ்க்கை பூச்சியமாகவே உள்ளது. இந்த நிலை முற்று முழுதாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்" - என்று சொன்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொழிலாளர் போராட்டங்களை முறியடிக்க, சர்வதேச முதலாளித்துவச் சக்திகள் எத்தகைய நடவடிக்கையையும் எடுக்கத் தயங்காது" என்றார் தோழர் உமாகாந்தன். இங்கிலாந்தில் 56வாரங்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தையும், அது தொடர்பாக பிரித்தானிய அரசு எடுத்த மோசமான சூழ்ச்சி நடவடிக்கைகளையும் சுட்டிக் காட்டிய அவர் "முதலாளித்துவக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தொடர்புச் சாதனங்கள், தொழிலாளர் போராட்டங்களைக் கொச்சைப் படுத்துகின்றன. தொழிலாளர்களது போராட்டங்கள் பிரச்சினைகளை உருவாக்குவதல்ல, பிரச்சினைகளைத் தீர்க்கவே என்றார்.




கூட்டத்திற்கு சமுகமளித்தோரைப் பெரிதும் கவர்ந்த மே தினம் உருவகச் சித்திரம்.

"இன்று இயக்கங்களிடையே ஏற்பட்டிருக்கும் ஐக்கியம், சரியான காரணிகளின் அடிப்படையில் ஏற்பட்ட வலுவான ஐக்கியமாகும்" - எனக் கூறினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் வாகீஸ் லோகநாதன். "இத்தகைய ஒரு ஐக்கியத்தை எதிர்ப்பவர்கள் தோல்வியையே சந்திப்பார்கள். சிறுபான்மை இனத்தவரான தமிழ் பேசும் மக்களைக் கொன்று குவிக்கும் சிறீலங்கா அரசை எதிர்த்துப் போராட இந்த ஐக்கியம் அவசியமானது. சிறீலங்கா அரசைப் போராடிக் கவிழ்க்கும் உரம் எம்மிடம் உண்டு. எனவே போராட்டத்துடன் எம்மை நாம் முழுமையாக இணைத்துக் கொள்ள வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

"ஈழப் போராட்டம் பாட்டாளிவர்க்க சிந்தனையில் அணுகப்பட வேண்டிய ஒன்று. சகல பாட்டாளிகளையும் ஒருமுகப்படுத்தி ஓரணியில் திரட்டுவதன் மூலம்தான் ஈழப் போராட்டம் சாத்தியம் - எனவே, மேதினம் எமக்கு முக்கியம்" — தோழர் சுகன் தனது உரையில் இவ்விதம் குறிப்பிட்டார்.

மேதின உரைகள் முடிந்ததும் தோழர் மனோகரனால் தயாரிக்கப்பட்ட 'மேதினம்' உருவகச் சித்திரம் மேடையேற்றப்பட்டது. அடிமைப்பட்டுக் கிடக்கும் பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவத்திற்கு எதிராக ஓரணியில் திரட்டப்பட்டு வெற்றி காண்பதை மையமாகக் கொண்ட இச்சித்திரம் பார்வையாளர்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றது.

தோழர் சபாலிங்கத்தின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது. கூட்டத்தில் ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் சார்பில் நிதி திரட்டப்பட்ட போது ஆயிரம் பிராங்குகளுக்கு மேல் சேர்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

— சயந்தர் —

சர்வதேச முற்போக்கு சக்திகளே!

ஒடுக்குமுறைக்கெதிராக ஒன்றுபடுவோம்.

-EPRLF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுச் சூரியன்கள்

எங்கள்!

சின்னவனே! பண்டிதனே!
பரிபூரணனே! மலரனே
நிறைகின்ற வரிகளிலே......
நீண்டெரியும் மணி விளக்குகளே
செம்மண் புழுதிகளை சித்தரித்த
கோலங்களே.......

உங்கள்!

அன்னை என்ன எம் மண்ணைப் பாலாக்கி
தன் மார்பால் கொடுத்தாளோ
ஈழ தேசத்தின் சோகத்தை கண்ணுக்குள்
வைத்தானோ உன் அப்பன்.


எங்கள்!

ஈழத்து சோளங்கூட
அடித்து அடித்து கூவுதடா.
ஆழ மில்லாக் குடாக் கடல் கூட
அலை அடித்து புலம்புதடா
காரிருளில் எழுந்தெரிந்த
சூரியனின் குஞ்சுகளே
வால் வெள்ளி போல் வந்து சென்று
ஈழ மாணிடத்து ஒளி சுரங்களே!

நீங்கள்!

இனியொருக்கால் பிறந்து வந்து
ஈழ வீதிகளில் நடந்து சென்று
ஐக்கியத்தை தத்துவத்தை வலியுறுத்தி
இன்னும் அவா எதிரிகளை
அடித்து துரத்துங்கள்.

— செல்வம் —



# ஜமேக்காவின் இன்றைய அவசியத்தேவை சுரண்டலுக்கு எதிரான புரட்சிக்கட்சி

## விரைவில் பிறக்குமென்கிறார் கவிஞை பிறேஸ்



ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் 'சங்கே முழங்கு' இரண்டாவது நிகழ்வில் கலந்து கொண்ட ஜமேக்க கவிஞை பிறேஸ்.

"வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஜமேக்காவின் அபிவிருத்தியைச் சுரண்டுகிறார்கள். மக்கள் தலையிடவேண்டிய பிரச்சினைகளுக்குள் எல்லாம் அமெரிக்கா தலையிடுகிறது. தமக்கு தேவையான ஜனநாயகத்தை மக்களே தெரிவு செய்துகொள்ளவேண்டும்" கரீபியத்தீவுகளில் ஒன்றான ஜமேக்காவின் அரசியல் நிலைப்பாட்டை இவ்விதம் கோடிட்டுக்காட்டினார் ஜமேக்க கவிஞையான ஜேன் பின்ரா பிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மாதம் லண்டனில் நடைபெற்ற மூன்றும் உலக நாடுகளின் கறுப்புஇனப் போராளிகள் தொடர்பான புத்தக கண்காட்சியில் கலந்சகொள்ள வந்த அவர் பாரிஸிற்கும் விஜயம் செய்தார். அந்த விஜயத்தின்போது 'தமிழ்முரசு' க்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். DUB POETS 'டுப் போயெற்ஸ்' குழுவைச்சேர்ந்த பிரேஸ் 'பதில்கள்' என்ற கவிதைத்தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்.

அவர் அளித்த பேட்டியின் சுருக்கம் வருமாறு.

அடிமைகள் எழுச்சி

அராவாக் இந்தியர்களே ஐமேக்காவின் ஆதிக்குடிகள் தங்கவளம் தீவில் இல்லை என்பது தெரிந்தும்கூட, அரவாக்கியரை தங்கத்தேடுதலிற்கு கட்டாயப்படுத்திய ஸ்பானியர் அவ் ஆதிஇனத்தை முழுமையாகக் கொன்றொழித்தார்கள். இது ஒரு கொடூரமான இன அழிப்பு. இன்று அரவாக்கியர் எவருமே இல்லை.

1965ஆம் ஆண்டு இங்கிலாந்தின் காலனியானது. மேற்காபிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து தீவிற்கு முதற்றடைவையாக இங்கிலாந்து அடிமைகளைக்கொண்டுவந்து சீனி உற்பத்தியில் அவர்களைக் கசக்கிப்பிழிந்தது. கொடுமைகளை இனியும் தாங்கமுடியாது என்ற அளவில் அகதிகளில் சிலர் கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் கரும்புத்தோட்டங்களிலிருந்து தப்பியோடி மலைகளில் ஒழிந்திருந்து பிரித்தானியருக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டனர். இவ்வாறு தாக்குதல் மேற்கொண்ட அடிமைகளை 'மரூன்' என்பர். இவர்களுள் போல்போகர், நன்னி (பெண்) சாம்சார்ப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1870 வரை இப்போராட்டம் நீடித்ததம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962ம் ஆண்டு தீவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. ஜமேக்க தொழிலாளர் கட்சியும் மக்கள் தேசியக்கட்சியும் இணைந்து சுய அரசு ஒன்றை அமைத்தன. தொழிலாளர் கட்சியின் தலைவரான மான்லே பிரதமரானார்.

அடிப்படைப்பிரச்சினைகள்.

சீனி ஆலைகளே தீவின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை. ஆனால் அவைகளில் பெரும்பாலானவை வெளிநாட்டு முதலாளிகளின் கைகளிற்றான் சிக்கியிருக்கின்றன. அத்தோடு ஐரோப்பிய நாடுகளில் தற்போது உருவாக்கப்பட்டிருக்கும் சீனிக்குதங்கள் தீவின் சீனி உற்பத்தியைப் பாதித்திருக்கிறது. இதனால் வேலையின்மையும் விவசாயத்திட்டங்களில் பாரிய சிதைவும் ஏற்பட்டுள்ளன. கணிசமான அளவிற்கு வருமானத்தை ஈட்டித்தரும் உல்லாசப் பிரயாணத்துறையை அமெரிக்கக் கம்பெனிகள் கட்டுப்படுத்துகின்றன. இங்கிலாந்தின் காலனித்த ளையிலிருந்து தப்பி, அமரிக்க, அதன் அயல் நாடுகளின் சுரண்டலுக்குள் தீவு சிக்கிவிட்டது.

மைக்கல் மான்லே.

மான்லேயின் மகனான மைக்கல்மான்லே 1972ம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இவர் உண்மையிலேயே தீவின் வளர்ச்சியில் அக்கறைகொண்டிருந்தார். இவர் காலத்தில் அமெரிக்க – ஜமேக்க உறவுகளில் முறிவு ஏற்பட்டது. மூன்றும் உலக நாடுகளுடனான உறவை வலுப்படுத்திய இவர் விவசாய அபிவிருத்திக்கான பல திட்டங்களை உருவாக்கினார். எனினும் அமெரிக்க கனவு மக்களை மயக்கிக்கொண்டிருந்ததால் 1980ம் ஆண்டு இவரது ஆட்சி கவிழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>எட்வார்ட்சேகா</u>.

மைக்கல் மான்லேக்குப்பின் பிரதமராக வந்தவர் ஜமேக்க தொழிலாளர் கட்சியின் எட்வர்ட் சேகா. இவர் றேகனுக்கு மிகவும் வேண்டியவர். அமெரிக்காவுடன் பல ஒப்பந்தங்களைச் செய்ய உதவியாக இருந்தவர். இவரது ஆட்சியால் வாழ்க்கைச் செலவு நாளுக்குநாள் உயர்ந்துகொண்டேயிருக்கிறது. சேகாவின் ஆட்சி மக்களை மோசமாக வருத்துகிறது. கடந்த ஜனவரி மாதம் எரிபொருட்களின் விலைகள் மிரென்று பல மடங்கு ஆக உயர்த்தப்பட்டன. இந்த விலையேற்றம் மக்களை விழிப்பு அடையச் செய்தது. கட்சிகள் எதனதும் தூண்டுதலின்றி அவர்கள் கொதித்தெழுந்து இரண்டுநாட்கள் வேலைநிறுத்தமொன்றை மேற்கொண்டு அரசநிர்வாகத்தை நிலைகுலையச் செய்தனர்.

<u>கட்சிகள்</u>.

பொதுவாகப் பார்க்கையில் மக்களது நலன்மீதும் தேச அபிவிருத்தியிலும் அக்கறை கொண்ட கட்சிகள் எதுவும் அங்கில்லை. புரட்சியை முன்னெடுக்கக்கூட ஒரு கட்சி இன்னமும் தோன்றவில்லை. இனிமேல்தான் தோன்றவேண்டும். நிச்சயமாக அப்படி ஒன்று தோன்றியே தீரும்.

<u>அரசகொலைகள்</u>.

அரசுக்கு எதிராகக் கோஉகமெழுப்புபவர்கள் கொல்லப்படுகின்றனர். இதேவேளையில் மக்களிடையே குற்றங்களும் அதிகரித்து வருகின்றன. அனைத்திற்கும் நாட்டின் மோசமான பொருளாதார, அரசியல் நிலைப்பாடே காரணம். ஆட்சியைக் குறுக்குவழியால் கைப்பற்றும் நோக்கில் மக்கள் வசம் சட்டவிரோதமாகக் கொடுக்கப்பட்ட துப்பாக்கிகள் இன்று ஆட்சியாளர்களை நோக்கித் திரும்பியிருக்கின்றன. துப்பாக்கிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் தூக்க வேண்டிய சூழலை அரசாங்கமே உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

## புரட்சிக் கலைஞர்கள்.

ஜமேக்காவில் மக்களுக்காகத் துணிந்து குரல் கொடுத்துக்கொண்டிருப்பவர்கள் கலைஞர்களாவர். இதனால் கலைஞர்கள் பலவித ஆபத்துக்களை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன் பிரபல இசைக்கலைஞரான மைக்கல் சிமித் அரசியல் கூட்டமொன்றில் பாடிவிட்டுத் திரும்புகையில் அரசகூலிப்பட்டாளங்களால் கல்லாலெறிந்து படுகொலை செய்யப்பட்டார். பாடகர் பொப்மார்லே ஒரு புரட்சிகர சத்தியாகத் திகழ்ந்தார். அவரது மரணத்தைக்கூட இயற்கை மரணமென்று நாம் நம்பவில்லை.

## இன உறவு.

தீவில் பல இனங்கள் வசிக்கின்றன. ஆனால் இனப்பிரச்சினைகள் அங்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் தீவினை உறுஞ்சுவதைத் தடுக்க வேண்டும் என்ற முனைப்பு அனைவரிடமுமுண்டு. அங்கு தற்போது தொடங்கியிருப்பது நவகாலனித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான போராட்டமாகும். இந்தப்போராட்டத்தினைக் கொண்டு செலுத்தக்கூடிய சாத்தியக்கூறு தற்போது உருவாகி வருகிறது. மக்களிடமிருந்துதான் புரட்சி வரவேண்டும். தற்போது மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

கவிஞை பிறேஸ் இவ்வாறு தனது கருத்துக்களை வெளியிட்டார்.

"சந்திப்பு : கே. கே. மோகன்

# ஈழத்தின் இரத்தம் தோய்ந்த பக்கங்கள்

எமது பாச பூமியாகிய ஈழத்தின் மண் தினமும் எமது மக்களின் பச்சை இரத்தத்தில் நனைந்து கொண்டிருக்கிறது. வெறிபிடித்த சிறீலங்கா படைகளின் கோரத்தனம் தொடர்ந்து பல நூறு அப்பாவித் தமிழ்மக்களின் உயிர்களைப் பறித்துக் கொண்டிருக்கிறது.

15.05.85 அன்று நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானுக்குப் புறப்பட்ட வள்ளம் கடலில் சிவிலுடையணிந்த கடற்படையினர் கத்திகள், வாள்கள் சகிதம் வள்ளத்தில் பிரயாணம் செய்த அப்பாவிப் பொதுமக்கள் 33 பேரை கோரத்தனமாகக் கொன்று கடலில் தள்ளினார். இச்சம்பவத்தில் 33 பேர் படுகாயமடைந்தனர்.

அநுராதபுரத் தாக்குதலைத் தொடர்ந்து அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் நடந்த தாக்குதலில் சிங்களக் குண்டர்களால் அநுராதபுரம் ரயில் நிலைய அதிபர் தங்கராசா, இன்ஜின் சாரதி சிவதாசன் (ஏழாலை) ரேடியோ அறிவிப்பாளர் கனகரத்தினம் (கொக்குவில்) டீசல் உதவியாளர் வேலுப்பிள்ளை, சோமசுந்தரம் (மானிப்பாய்), சரவணபவான் (வட்டுக்கோட்டை), இராசதுரை (காங்கேசன்துறை) ஆகியோர் பலியாகியுள்ளனர்.

அநுராதபுரத்தில் இராணுவமுகாமொன்றில் பாதுகாப்புக் கோரி தஞ்சம் புகுந்த தமிழ் ஊழியர்களில் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். இது இராணுவ கோரக் கொலைகளைச் செய்துள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரைச் சேர்ந்த கர்ப்பிணியான 23வயது இளம் பெண்ணொருத்தி தனது 4வயதுப் பிள்ளைக்கு முன்னாலேயே தேடுதல் வேட்டையிட வந்த வெறிநாய்களால் கற்பழிக்கப்பட்டாள்.

9.05.85 இல் பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் நடந்த சம்பவங்கள் பெரும் சோகமானது. இப்பகுதியில் நடத்தப்பட்ட வெறியாட்டங்களில் 90க்கும் மேற்பட்ட அப்பாவிமக்கள் ஆயுதபடைகளால் கொல்லப்பட்டுள்ளனர். பல பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். ஊறணியில் 14க்கும் 16 வயதுக்குமிடைப்பட்ட 12 பாடசாலைச் சிறுவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு அரசபடையினரால் ஈவிரக்க சுட்டுக் கொல்லப்பட்டனர். உடுப்பிட்டியில் 50 இளைஞர்களை ஒரு சன சமூக நிலையத்துள் வைத்துப் பூட்டி வெடிகுண்டை வெடிக்கச் செய்து அத்தனை பேரையும் இராணுவம் கோரத்தனமாகக் கொலை செய்துள்ளது.

13.05.85 இல் 500க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கல்வியங்காட்டில் தேடுதல் வேட்டை நடத்திய போது 5 பிள்ளைகளுக்குத் தாயான ஒரு பெண்ணை 18 வெறிநாய்கள் கற்பழித்துள்ளன. தொடர்ந்தும்... தொடர்ந்தும் அவல இருள் எம் பூமியை மூடிக் கொண்டே செல்கிறது......

---

தோழர்களே!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் ஆகியவற்றின் பிரான்சுப் பிரிவுகளுடன் தொடர்பு கொள்வதற்கான முகவரி...

10, RUE DES MARTYRS
75009 - PARIS
FRANCE.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் ரேகன்:
# எண்ணங்கள் நிறைவேறுமா?

வா. மகாதேவா.

அமெரிக்கா, கனடா, ஜப்பான், பிரான்சு, மேற்கு ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளின் தலைவர்கள் மேற்கு ஜேர்மனியின் தலைநகரான 'பொன்' நகரில் மே மாதம் முதல்கிழமையில் பொருளியல் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

1950 களிலும், 60 களிலும் தத்துவமேதை கார்ல் மார்க்சின் விஞ்ஞான பொருளியல் கண்ணோட்டங்களை கண்மூடித்தனமாக விமர்சித்து கெயின்ஸ், மில்டன் பிறட்மெனின் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளே உலக மக்களை பசி, பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருந்து விடுவிக்கும் என்று சப்புக் கொட்டிய அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனது ஆசியர் கூட்டாளிகளும் 'பொன்' மகாநாட்டில் அடுத்த கூட்டத்தை எப்போது கூட்டுவது என்ற திகதியைக் கூட நிர்ணயிக்க முடியாத அளவிற்கு தங்களுக்குள் பிடுங்குப் பட்டுக் கொண்டனர்.

முதலாவது உலகயுத்தத்திலும், இரண்டாவது உலகயுத்தத்திலும் தமக்குள் ஆயுதமேந்திப் பிடுங்குப்பட்ட இந்த முதலாளித்துவ நாடுகள் 'பொன்' மகாநாட்டில் வார்த்தைகளால் பிடுங்குப்பட்டனர்.

1960களின் பிற்பகுதியில் முதலாளித்துவ செழுமைக்காலம் முடிவுற்றதைத் தொடர்ந்து இந்த முதலாளித்துவ நாடுகளில் தலையெடுத்துள்ள பொருளாதார பிரச்சினைகள் நாள்தோறும் கூடிக்கொண்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் 12 மில்லியன் வேலையில்லாத் திண்டாட்டமும், பிரித்தானியாவில் 4 மில்லியன் வேலையில்லாத் திண்டாட்டமும், மேற்கு ஜேர்மனியில் 2.6 மில்லியன் வேலையில்லாத்திண்டாட்டமும் ஏற்பட்டு விட்டது. பிரான்சில் 2.5 மில்லியன்பேர் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த முதலாளித்துவ நாடுகளில் விலைவாசியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது முதலாளித்துவப் பொருளியல் விற்பன்னர்களால் முடியாத காரியமாகிவிட்டது.

ஜப்பானிலும், மேற்கு ஜேர்மனியிலும் தேங்கி வழியும் உற்பத்திப் பொருட்கள் சந்தையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. தனது உள்நாட்டுச் சந்தையை ஜப்பானும், மேற்கு ஜேர்மனியும் ஆக்கிரமிப்பதால் பாதுகாப்பு வாதத்திற்கு (PROTECTIONISM) தாவிவிட அமெரிக்க ஏகாதிபத்தியம் அருக்கின்றது. இதன் வெளிப்பாடே வியாபாரத்திற்கும், சுங்கத்தீர்வுக்குமான பொது உடன்பாட்டு (GATT) ஸ்தாபனத்திலிருந்து அமெரிக்கா வெளியேற முனைவதன் அர்த்தமாகும்.

GATT இலிருந்து தான் விலகிக் கொள்வதன் மூலம் தனது நாட்டுச் சந்தையை தானே முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்பார்க்கிறது. அதேவேளையில் அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்ந்து செல்வதால் அது அமெரிக்க வங்கிகளின் இலாபங்களை பன்மடங்காகப் பெருக்கச் செய்யும். இதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் இலாபமடைய முனைகிறது.

இதே நேரத்தில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளான ஜப்பான், மேற்கு ஜேர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, கனடா, இத்தாலி போன்ற நாடுகளும் தத்தமது நலன்களைப் பாதுகாக்க பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகின்றன.

இந்த மகாநாட்டில் பிரான்சுக்கும், அமெரிக்காவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடு மிகவும் முக்கியமானது. அமெரிக்க ஜனாதிபதி றேகன் அமெரிக்காவிற்கும் ஏனைய நாடுகளிற்கும் இடையிலான வியாபாரத்தில் ஒரு புதிய முறையை புகுத்தும் யோசனையை முன்வைத்தார். பிரான்சு போன்ற நாடுகள் தமது விவசாய ஏற்றுமதிப் பொருட்களுக்கு மானியம் வழங்குவதால் அமெரிக்கா தனது விவசாய ஏற்றுமதியில் இந்த வருடத் தொடக்கத்தில் மட்டும் 250 மில்லியன் டொலர்களை இழந்து விட்டது. இதனால் விவசாய ஏற்றுமதிப் பொருட்களுக்கு மானியம் அளிக்கப்படக்கூடாது என்பதே அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது.

இதனை பிரெஞ்சு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமாக இருந்தால் பிரான்சு 10 பில்லியன் டொலர்களை இழக்க வேண்டி நேர்ந்திருக்கும். இதனால் இம்மகாநாட்டில் பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரான் நேரடியாக றேகனின் ஆலோசனைகளை நிராகரித்ததுடன் அடுத்தபடியான வியாபாரப் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு திகதியைக் குறிப்பதை தமது வீட்டோ அதிகாரத்தினால் ரத்துச் செய்தார். இதனால் இம்மகாநாட்டின் முடிவு சர்வதேச முதலாளித்துவ நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அடுத்ததாக இம்மகாநாட்டில் றேகனின் அடுத்த யோசனை SDI திட்டம் பற்றி ஆராயப்பட்டது. SDI (STRATEGIC DEFENCE INITIATIVE) என்பது பூமிக்கு வெளியே நின்றுகொண்டு பூமியில் இருக்கும் ஆயுதங்களை அழிப்பதும் தனது ஆயுதங்களை நெறிப்படுத்துவதுமான மூன்றாவது உலகயுத்தத் தயாரிப்பின் ஒரு பகுதியாகவே சர்வதேச முற்போக்காளர்களால் கருதப்படுகிறது.

இந்த SDI திட்டத்தில் பங்குகொள்ள வருமாறு அமெரிக்கா NATO வின் அங்கம் வகிக்கும் நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளது. இதிலும் குறிப்பாக இங்கிலாந்து, பிரான்சு, மேற்கு ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் அதிகமட்டப் பண வசதியையும், ஆலோசனைகள் உதவியையும் அமெரிக்கா வேண்டி நிற்கிறது. இதனை ரேகன் 'பொன்' மகாநாட்டில் தெரியப்படுத்தினார்.

அவருடைய யோசனையை பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரோன் நிராகரித்ததுடன் SDI திட்டத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய யூரேகா (EUREKA) திட்டத்தை மேற்கு ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகள் ஆதரிக்க வேண்டுமென்றும் பிரான்சு கோரியது.

இது அமெரிக்க, பிரெஞ்சு ஜனாதிபத்தியங்களுக்கிடையே வளர்ந்துவரும் முரண்பாட்டை தெளிவாக எடுத்துக் காட்டக்கூடியதாக இருந்ததுடன் EUREKA திட்டமானது SDI திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக அமைந்ததுடன் மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகள் நிலைப்பாடு எடுக்கமுடியாமல் திண்டாடும் வகை (இன்று வரை திண்டாடி வருவதை) காணக்கூடியதாக இருந்தது.

ரேகன் அரசாங்கத்திற்கு இன்னுமொரு பலத்த அடி 'பொன்' நகரில் காத்திருந்தது. நிக்கரகுவா புரட்சிகர அரசிற்கு எதிராக ரேகன் நிர்வாகம் மே மாதம் 1ம் திகதி முழுமையான பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்தது. இது அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள இடதுசாரிகளால் மட்டும் அல்லாது முற்போக்கு, மிதவாத அரசியல் தலைவர்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. 'பொன்' மகாநாட்டில் அமெரிக்காவைத் தவிர்ந்த மற்றைய ஆறு நாடுகளும் நிக்கராகுவாவின் மீதான பொருளாதாரத் தடையை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்பதைத் தெரிவித்தன. இந் நாடுகளின் போக்கானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வலுநிலை சர்வதேச ரீதியாக குறைந்து வருவதை தெளிவாக எடுத்துக் காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேகனின் மேற்கு ஜேர்மன் வருகைக்கு எதிராக அந்நாட்டின் தலைநகரான 'பொன்'னிலும், பிராங்போர்ட், கேலின் நகரங்களிலும் இடதுசாரி முற்போக்குச் சக்திகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெற்றன. 50,000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட இந்த ஊர்வலங்கள் மேற்கு ஜேர்மனியில் ஏகாதி-பத்திய எதிர்ப்புக் கொள்கை வலுவடைந்து வருவதை தெளிவாகக் காட்டியது. இதன் இன்னுமொரு வெளிப்பாடுதான் மேற்கு ஜேர்மனியின் மிகப்பெரிய தேர்தல் தொகுதியான NORD RHEIN WEST PHALIAவில் ஆளும் கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சி (CDU) அரசாங்கம் கண்டது மிகப் பெரிய தோல்வியாக அமைந்தது.

மேற்கு ஜேர்மனியில் மிகவும் விரும்பத்தகாத நிகழ்வுகளைச் சந்தித்துக் கொண்டு ஸ்பெயின் நாட்டிற்கு வந்திறங்கிய றேகனுக்கு அந்த நாட்டின் 10 இலட்சம் மக்களின் மிகப் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் காத்திருந்தது. "நேட்டோ ஒழிக", "அமெரிக்கத் தளங்களே வெளியேறுங்கள்" என்று ஸ்பானிய மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஸ்பெயின் நாட்டின் மிக அதிகமாக விற்பனையாகும் EL PAIS தினசரி நடாத்திய கணக்கெடுப்பில் 54% மான மக்கள் NATO அமைப்பை நிராகரித்தனர். 66% மான மக்கள் அமெரிக்கத் தளங்கள் தமது மண்ணில் இருப்பதை விரும்பவில்லை. 74% மான மக்கள் றேகன் ஒரு போர்வெறியன் என இனங் கண்டனர்.

இந்தமட்டத்தில் எதிர்ப்புகளைச் சந்தித்து அமெரிக்கா திரும்பிய அமெரிக்க ஜனாதிபதி றேகன் தமது முயற்சியில் மனம் தளராது மீண்டும் வெள்ளை மாளிகையில் புகுந்து கொண்டார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு எதிராக சர்வதேச ஒடுக்கப்பட்ட மக்களும், கிழக்கு ஐரோப்பிய, ஜனநாயகநாடுகளும் செயற்பட்டு வருகின்ற இவ்வேளையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அதிலும் குறிப்பாக பிரான்சு ஏகாதிபத்தியமும் வெளிப்படையாக செயற்பட ஆரம்பித்துள்ளதை [illegible]'மாநாடு காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிலபக்கங்கள் — ஜனசுகிர்தன்

# பயங்கரவாதத் தகவல் அலைகள்

அநுராதபுரத்தில் கடந்தமாதம் 140 ஐ அண்மித்த சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்ட போது சர்வதேச செய்தித் தொடர்புச் சாதனங்களில் சில முகத்துப் பறைத்து தமது சுய உருவைக் காட்டிக் கொண்டன. கடந்த கால் நூற்றாண்டுகளாக காலத்துக்குக் காலம் இவை தமது சக்தியை, ஈழப் போராட்ட முனைப்பை மழுங்கடிக்க உபயோகப்படுத்தி வந்துள்ளன. குறிப்பாக முதலாளித்துவ பிற்போக்குக் கட்டுப்பாடுகளின் கீழ் இயங்கும் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை ஆகியன ஈழ மக்களுக்கு எதிரான பிரச்சாரங்களைச் செய்வதற்குப் பின்னிற்கவில்லை. அத்தோடு சிறீலங்கா அரசின் அடக்கு முறைகளுக்குத் துணைபோவதும் வழக்கமாக இருந்தது. இராணுவ அட்டூழியங்களைத் தீவுக்குள்ளேயே அமுக்கிய அவை உரிமைகளுக்காகப் போராடும் ஈழப் போராளிகளைப் பயங்கரவாதிகளாகக் காட்டின. ஆனால் இப்புரட்டல் முயற்சிகளை ஈழப் போரின் நியாயவிழிப்புச் சுட்டெரித்து வருகின்றது.

ஈழப் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை- இந்தக் கண்ணோட்டத்தில் தகவல்களைக் கொடுத்து பிரச்சினையின் இறுக்கத்தை இளகப்பண்ணுவது இச் சாதனங்களின் ஆரம்ப நோக்காயிருந்தது. அவற்றின் இந்தப் பரிமாணம் உடைக்கப்பட்டு ஈழப் பிரச்சினை இன்று சர்வதேசப் பிரச்சினை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. எனவே, அவை இன்றைய நிலைப்பாட்டின் தளத்தில் நின்று ஈழமக்களுக்கு எதிராகக் குழிபறிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளன. எனவேதான் மனித குலத்தின் விரோதிகளாக நின்று ஈழமக்களின் அழிவிற்கான கருமங்களை வேகமாக செய்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிச் சிங்கள மக்கள் அநுராதபுரத்தில் கொல்லப்பட்டது உண்மைதான். ஆனால் அதைச் செய்தது யார் என்பது இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. நாம் இச் செயலைச் செய்யவில்லை எனவும், இச் செயலைக் கண்டித்தும் போராளிகள் தரப்பிலிருந்து அறிக்கை விடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பிற்போக்குச் செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களோ, ஈழப்போராளிகளே இந்தக் கொலைகளைச் செய்தனர் எனச் செய்தியை சர்வதேசரீதியில் பரப்பி விட்டிருக்கின்றன. அரசாங்க தரப்பின் தகவலை ஏற்று, சரியான ஆய்வுக்கு எடுக்காமல் இச்செய்தி உலகம் முழுவதும் பரப்பிவிடப்பட்டிருக்கிறது. விளைவு—அதாவது இச் செய்தியின் பலாபலன் – 300க்கும் மேற்பட்ட ஈழமக்கள் கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கோரத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

உதாரணத்துக்குப் பிரெஞ்சுத் தொலைக்காட்சிச் சேவையை எடுப்போம். இலங்கைச் செய்தி ஒன்றை இவர்களது சேவையில் காணவேண்டுமானால் அங்கே சிங்களமக்கள் யாராவது கொலை செய்யப்படவேண்டும் போலிருக்கிறது. அண்மையில் கென்ற், டொலர் பண்ணைகளில் குடியேற்றப்பட்ட சிங்களக் கைதிகளும், காடையர்களும் போராளிகளால் கொல்லப்பட்டபோது அப்பாவிச் சிங்களமக்கள் கொல்லப்பட்டுவிட்டதாக ஒப்பாரி வைக்க வாயைத் திறந்த இது அநுராதபுரம் சம்பவத்திற்குப் பின் இன்னொரு தடவை தனது வாயைத் திறந்திருக்கிறது. இம்முறையும் ஈழமக்களுக்கெதிராகவே புலம்பியிருக்கிறது. இந்த சடலங்கள் பெரிது படுத்தி (FOCUS) பண்ணிக் காட்டப்பட்டன. ஈழத்தின் தன்மையை (IMAGE) கெடுக்க பெரும் பிரயத்தனம் எடுக்கப்பட்டது.

ஆனால் இதன்பின் 300க்கும் மேற்பட்ட ஈழமக்கள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டதைப் பற்றி ஒருவார்த்தை கூட இல்லை. தனது தொலைக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைப் பாரம்பரியத்தின் 'போக்கிரித்தனத்தை' மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

இத்தகைய ரீதியான செய்திப் பரிமாற்ற அணுகு-முறையை பயங்கரவாதத்தின் இன்னொரு முகமாகவே எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளிற்கும், இந்த செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களின் செயற்பாடுகளுக்கு மிடையில் எந்த வித்தியாசமும் இல்லை.

பிழையான செய்திகளும், நேர்மையான பரிசீலனைக்கு உட்படாமல் வெளிவரும் செய்திகளுமே ஈழ மக்களின் உயிரிழப்பில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றன. பிற்போக்குச் சக்திகளின்றும், சிந்தனைகளும் தங்குமடமாக இவை மாறிக்கொண்டு வருவது, உலக அமைதிக்கும் கூட ஒரு அச்சுறுத்தலேயாகும்.

ஈழத்தை எதிர்க்கும் இந்தச் செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களின் கொடூரமான போக்கை, திட்டமிடப்பட்ட பிரச்சார எதிர்ப்பின் மேல் அக்கறையும். இப்பொறுப்பு ஈழமக்களைச் சார்ந்து நிற்கிறது.

கடந்த காலங்களில் ஈழத்துக்கு ஆதரவாக முடுக்கிவிடப்பட்டுவரும் வலிமைமிக்க பிரச்சாரங்கள் நிட்சயம் தற்போதைய செய்தித்தொடர்பு ஸ்தாபனங்களின் வேகத்தை நிர்மூலமாக்கும் என நம்புகிறோம்.

தோழர்களே!

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) தரும் ஈழச் செய்திகளை அறிவதற்காக தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்....

**874-60-43**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## பிரான்சு - மே. ஜேர்மனி உறவில் விரிசல்.



ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார உச்சி மகாநாட்டில் பிரான்சு, மேற்கு ஜேர்மனி ஆகிய இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு இவ்விரு நாடுகளின் உறவுகளினிடையேயும் பெரும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் பொருளாதார, இராணுவக் கொள்கைகளுக்கு சார்பாக ஆதரவளித்து அமெரிக்காவின் கால்களில் பிடித்து நிற்கும் ஜேர்மனியின் கொள்கையைக் கண்டித்துள்ள பிரான்சு, ஐரோப்பிய நாடுகளின் சுயாதீனத்தை வற்புறுத்தியுள்ளது. தமது உறவில் ஏற்பட்டுள்ள விரிசல்களைத் தீர்த்து வைக்கும் வகையில் பிரெஞ்சு ஜனாதிபதியும், மேற்கு ஜேர்மனியின் தலைவரும் பேச்சு வார்த்தைகள் நடத்திய போதும் கருத்து வேறுபாடுகள் தீரவில்லை எனத் தெரிகிறது.

## சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புகள்.



சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புகளின் படி ஜனாதிபதி மித்திரானுக்குச், சார்பாக 38% மானவர்களும் பிரதமர் ஃபபியுஸ் 57% மான ஆதரவு வாக்கை யும் பெற்றுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர்களில் ரேமண்ட் பார் 48% த்தினையும், பாரிஸ் மேயரான ஜக் சிராக் 34% மான வாக்குகளையும், முன்னாள் ஜனாதிபதி கிஸ்கார்ட் எஸ்டாங் 29% மான வாக்கினையும் அபிப்பிராயக் கணக்கீட்டில் பெற்றுள்ளனர். இடதுசாரிக் கட்சிகளுக்கான ஆதரவு 37.5% மாகவும், வலதுசாரிக் கட்சிகளுக்கான அபிப்பிராய வாக்குகள் 57.5% மாகவும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசப் பயங்கரவாதி றேகனின் இன்னுமொரு சதிச் செயல் அம்பலம்!



ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களைப் பயங்கரவாதமென கொச்சைப்படுத்தி தன்னை உலகின் பாதுகாவலனாகக் காட்டிவந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிகள் தொடர்ச்சியாக அம்பலமாகத் தொடங்கியுள்ளன. கடந்த மார்ச் மாதம் 8ம் திகதி லெபனானின் தலைநகரான பெய்ரூத்தில் வெடித்து அப்பாவிமக்கள் 92 பேரை பலி வாங்கிய குண்டு வெடிப்பிற்கு சி.ஐ.ஏ வே காரணம் என்பது அம்பலமாகியுள்ளது. ஷேக் முகமட் ஹூசெய்ன் ஃபடல்லா என்ற இஸ்லாமியத் தலைவரை கொலை செய்ய முயன்ற சி.ஐ.ஏ.யின் சதி அம்பலமாகி சி.ஐ.ஏ.யின் கொலைக்காரர்கள் லெபனானின் இரேல்வழியை நசுக்க ஆரம்பித்துள்ளமை தெளிவாக்கியுள்ளது.

## வங்காள தேசத்தில் கடும்புயல்! பலர் மரணம்!

வங்காள தேசத்தில் வீசிய கடும்புயல் எண்ணற்றோரின் உயிர்களைப் பலிவாங்கியுள்ளதுடன் பெரும் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளது. 3000 ஐ அண்மித்தவர்கள் புயலினால் கொல்லப்பட்டார்கள் என அரசதரப்பில் கூறப்பட்டாலும் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 40,000 ஐ அண்மித்தது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. அரச தரப்பு அறிக்கையின்படி 2,50,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 16,500 வீடுகள் முற்றாகவும் 1,22,800 வீடுகள் பகுதியாகவும் நாசமாக்கப்பட்டுள்ளதெனவும் 4,72,859 ஏக்கர் பயிர்செய்யப்பட்ட நிலங்கள் அழிக்கப்பட்டும் உள்ளன. இந்த அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மறுவாழ்வளிக்க 50 மில்லியன் டொலர்கள் வெளிநாடுகளின் உதவி தேவைப்படுகிறது என வங்காள தேசத்தின் இராணுவ ஆட்சியாளராகிய ஜெனரல் எர்சாட் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிக்கரகுவாவிற்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை!



Reuters

Daniel Ortega Saavedra

நிக்கரகுவாவின் சாண்டினிஸ்டாப் புரட்சிகர அரசை சதிகளின் மூலம் கவிழ்க்கும் முயற்சியில் தோற்றுப் போன அமெரிக்க ஏகாதிபத்தியம் அடுத்து எடுக்க விருக்கும் இராணுவ ஆக்கிரமிப்பின் முன்னோடியாக மே.1ம் திகதியிலிருந்து பொருளா தாரத் தடை ஒன்றை விதித்துள்ளது. இத்தடையின் கீழ் நிக்கர குவாவிற்கான ஏற்றுமதி, இறக் குமதிகள் தடை செய்யப்பட்டுள ளன, நிக்கரகுவாவின் கப்பல் கள் அமெரிக்கத் துறைமுகங் களுக்கு வருவதும், நிக்கரகுவா விமானங்கள் அமெரிக்காவில் தரிப்பதும் தடை செய்யப்பட் டுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இத்தடை நடவடிக்கைகள் உலக நாடுகளின் வன்மை யான கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. கூட்டுச்சேரா நாடுகள், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு, பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகள், சோவியத் யூனியன், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடு கள் 15 இல் 13 நாடுகள் ஆகியன கண்டனந் துள்ளன. அதே வேளையில் சோவியத் யூனி யனுக்கும் இன்னும் பல கிழக்கு, மேற்கு ஐரோ ப்பிய நாடுகளுக்கும் விஜயத்தை மேற்கொ ண்ட நிக்கரகுவா ஜனாதிபதி நிக்கரகுவா வின் பொருளாதார அபிவிருத்திக்கான பெரும் ஆதரவைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரம்' - பிரித்தானிய அரசின் முகமூடி கிழிகிறது!

கொடுங்கோலன் ஜெயவர்த்தனவின் அரசுக்கு முண்டு கொடுத்துவரும் பிரித்தானிய அரசின் சுயரூபம் தற்போது வெளியாகியுள்ளது. சமீப நாட்களாக இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் உச்சக்கட்டத்தை அடைந்ததை அடுத்து பெருமளவு இளைஞர்களும், யுவதிகளும் தமது உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு பிரித்தானியாவுக்கு அகதிகளாக வந்தனர். இவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் தனது கடமையிலிருந்து விலகி இவர்களை திருப்பி அனுப்பி ஜே. ஆர். அரசுக்கு தட்சரின் அரசு காவு கொடுக்க முனைந்ததுடன் மேலும் தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து பிரித்தானியாவுக்குள் அகதிகளாக வருவதை தடைசெய்யும் வகையில் விதிகளை மாற்றியுள்ளது.

அரசின் இந்த மனிதாபிமானமற்ற செயல்களை ஐ.நா. சபையின் அகதிகள் புனர்வாழ்வுக் குழுத் தலைவர், பிரித்தானிய அகதிகள் சங்கத் தலைவர், தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், நடுநிலைப் பத்திரிகைகள் ஆகியன வன்மையாகக் கண்டித்துள்ளனர். ஆயிரக்கணக்கான வியட்நாம் மக்களுக்கும், உகண்டா ஆசியர்களுக்கும், போலந்து மக்களுக்கும் அகதிகள் தகைமை கொடுத்து அவர்கள் வாழ்வழி செய்த தட்சரின் அரசு தமிழ் மக்களின் பிரச்சனையில் இப்படிப்பட்ட இரட்டை வேடமான முடிவை எடுப்பதற்கான காரணம், ஜெயவர்த்தன-தட்சர் அரசாங்கத்திற்கிடையேயுள்ள இறுக்கமான தொடர்புகளேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் - இந்திய ஐக்கியம் இறுக்கமடைகிறது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சமீபத்தில் சோவியத் யூனியனுக்கு மேற்கொண்ட விஜயம் இந்திய-சோவியத் உறவுகள் விருத்தியடைவதைக் காட்டுகிறது. சோவியத் தலைவர் கோர்பச்சேவோடு நீண்ட நேரக் கலந்துரையாடலை மேற்கொண்ட ராஜீவ் இந்தியத் தொழிற்துறை அபிவிருத்தியின் ஒப்பந்தங்களை மேற்கொண்டார்.

ராஜீவின் சோவியத் விஜயத்தின் போது சோவியத் யூனியனில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்தோடு சோவியத்தின் அதி உயர் பரிசான 'லெனின் சமாதானப் பரிசு' காலம் சென்ற திருமதி இந்திரா காந்திக்கு வழங்கப்பட்டது. இந்திராவின் பெயரிடப்பட்ட நினைவுச் சதுக்கம் ஒன்றும் சோவியத்தில் இந்தியப் பிரதமரால் திறந்துவைக்கப்பட்டது.

அனைத்தையும் விட முக்கியமாக சோவியத்துக்கும் இந்தியாவுக்குமிடையிலான பொருளாதார உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன்படி 1.15 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி இந்தியாவிற்கு சோவியத்தால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியா - சோவியத் யூனியன் இரு நாடுகட்குமிடையிலான வர்த்தக ஒப்பந்தம் மேலும் 15 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமாக இந்தியா தனது 58 பாரிய தொழிற்சாலைகளை சோவியத்தின் துணையுடன் நிறுவியுள்ளது. இவற்றில் 3 எண்ணெய்ச் சுத்திகரிக்கும் தொழில் நிலையங்கள், 4 சக்தி உற்பத்தி நிலையங்கள், 26 அலுமினிய தொழிற்சாலை ஆகியவையும் உள்ளடங்கும். இன்னும் 30 தொழிற்சாலைகள் சோவியத்தின் அனுசரணையுடன் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் உருக்குத் தொழிலில் 40% மான தொழிற்சாலைகளும், 55% கனரக மின்சார தொழிற்சாலைகளும், உலோக உற்பத்தியில் 80% மான தொழில் நிறுவனங்களும் சோவியத் உதவியைப் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்கா அரசு விசா தர மறுத்தது! பத்திரிகையாளர் செய்த பயணம் பகவான் ஆர். சிங் தரும் ஈழத் தகவல்.

"இலட்சுமிக்கு 52 வயது. சில மாதங்களுக்கு முன்தான் கணவனைப் பறிகொடுத்தாள். அவர்களது புதல்வர்களில் இருவர் தடுமறைவாகியும் இருவர் தடுப்புக்காவலிலும் உள்ளனர். தனது கணவனது மரணத்துடன் சம்பந்தப்பட்ட சடங்கு ஒன்றை அவள் செய்ய வேண்டியிருந்தது. அது தொடர்பாக உறவினர்களுக்கு அறிவிக்க வேண்டும். வீட்டுக்கருகிலுள்ள தபால்பெட்டி உபயோகமற்றிருந்தது. உறவினர்களிடம் கடிதம் போய்ச் சேர வேண்டுமானால், அவள் யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்துக்குத்தான் செல்ல வேண்டும். அரசாங்கத்தினால் போக்குவரத்துச் சேவைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வேளையில் அங்கு நடந்து செல்லும் மார்க்கம் ஒன்று மட்டுமே இருந்தது. தணிந்துப் போய் விட்ட அந்த விதவை முறையில் எண்ணெய் ஏற்றிப் புருஷனின் படத்தின் முன் வைத்தாள். அதுவே அவளால் செய்யக்கூடிய சடங்காகவிருந்தது."

ஈழத்தின் இன்றைய யதார்த்தச் சித்திரங்களில் ஒன்றான இதனை நமக்குக் காட்டுகிறார் இந்தியப் பத்திரிகையாளரான பகவான் ஆர். சிங். WEEK பத்திரிகையைச் சேர்ந்த இவர் இலங்கை அரசிடம் விசா கேட்டுப் பார்த்தார். ஒவ்வொரு தடவையும் அரசு அனுமதிதர மறுத்தது. விளைவு, விடுதலைப் போராளிகளுடன் கடலைக் கடக்கத் துணிந்தார். இவருடைய பயணம் திகில் நிறைந்த ஒன்றாய் அமைந்தது. இவர் சென்ற படகிற்கும், சிறிலங்காவின் கடற்படையினரின் படகிற்கும் இடையில் கடலில் கடும் மோதல் நடந்தது. எப்படியோ இன்னல்களைக் கடந்து போராளிகள் இவரை ஈழம் கொண்டுவந்து சேர்த்தனர். அவர் ஈழத்தின் மூலை, முடுக்குகள் அனைத்துக்கும் சென்று சிறிலங்கா அரசின் அடக்குமுறைக் கொடுமைகளைக் கண்டார். பின் நாடு திரும்பியதும், WEKK இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் இன்றைய நிலைமை பற்றி எழுதியிருந்தார்.

அவரது கட்டுரையிலிருந்து சில பகுதிகள் வருமாறு....

" வட இலங்கையின் தலைநகரில் வாழும் ஒவ்வொருவரும், எடுத்துச் சொல்வதற்கான பயங்கர அநுபவங்களை வைத்திருக்கின்றனர். வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழர்கள், தலைமுறை தலைமுறையாக அடக்கியொடுக்கப்பட்டு வந்தபோதும் கடந்த சில வருடங்களாகத்தான் இராணுவ அட்டூழியம் நாளாந்த காரியமாக வந்திருக்கிறது. எங்காவது ஒரு சூட்டுச் சத்தம் கேட்டால் - தப்ப முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டு ஒரு இளைஞனை இராணுவம் சுட்டுவிட்டது அல்லது ஒரு துரோகியை, படைகளுக்கு தகவல் கொடுப்பவனைப் போராளிகள் அழித்துவிட்டார்கள் என மக்களுக்குத் தெரியும்."

"பாடசாலைகளிலெல்லாம் கலகலப்பற்ற நீண்ட விடுமுறைகள். நிறையச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனால் வகுப்பை இடையில் முறித்துக் கொண்டு பிள்ளைகள் வீட்டுக்குள்ளேயே அடைபட வேண்டியிருக்கிறது. வன்முறைகள் ஏதும் நடைபெறாமல் இருக்கும் போது வதந்திகள் பரவுகின்றன. இளைஞனை இராணுவம் எங்கேயாவது வைத்துச் சுட்டுவிட்டது என்றோ போராளிகள் பொலிஸ் நிலையம் ஒன்றைத் தாக்கிவிட்டனர் என்றோ வதந்திகள் வகுப்பறை ஜன்னல்களை நோக்கி ஓடுகின்றன."

"சிங்கள இராணுவம், தமிழ் போராளிகளிடம் பயந்து நடுங்குகின்றது. பயத்தினால் சிங்களத் துருப்புக்கள் தளர்ந்து போயுள்ளனர். அவர்கள் மனம் போன போக்கில் மக்களைச் சுட்டுத்தள்ளி கைது செய்து கொண்டுமிருக்கிறார்கள்."

<u>ஒரு தந்தையின் வாக்குமூலம்</u>:

"எனது மகன் வீட்டை விட்டு விலகி ஒரு மாதத்தின் பின்புதான் அவன் போராளிகளுடன் சேர்ந்து விட்டான் என்பது எனக்குத் தெரியவந்தது. என்னால் என்ன செய்ய முடியும்? அவன் விலகிய பின்

என்றால் என்ன செய்ய முடியும்? அவன் விலகிய பின் என்றால் அவனைத் தடுத்து நிறுத்த முடியுமா? ஆகவே, அவன் ஒரு நல்ல நோக்கத்தின் பின் இருக்கின்றான் என எனக்குள்ளே நான் சொல்லிக் கொண்டேன்."

ஒரு தாயின் குரல்:

தனது மகனை நிக்கொலஸ் போராளிகளுடன் இணைந்து விட்டதைப் பற்றி மேரி றோஸ் இப்படிக் கூறுகிறார் -: "முதலில் எனக்குக் கோபம்தான் வந்தது. பின்னர், விரைவிலேயே யதார்த்தத்தை மீளாலோசனை செய்து கொண்டேன். எட்டு மாதங்களாக அவனிடமிருந்து ஒரு செய்திகூடக் கிடைக்கவில்லை. தான் சுகமுடன் இருப்பதாக ஒரு தடவை எழுதியிருந்தான். தனது முகவரியை எனக்கு அவன் தரவில்லை. கடந்த அக்டோபர் மாதம் வீட்டுக்கு வந்தபோதுதான் ஒரு தடவை அவனைப் பார்க்க முடிந்தது."

பத்திரிகை ஆசிரியர் கருத்து:

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒரேயொரு ஆங்கிலத் தினசரியான SATAURDAY REVIEW இன் ஆசிரியரான காமினி நவரட்ண இப்படிக் கூறுகிறார்:- "இப்போது யாழ்ப்பாணம் முழுப்பற்றிலுள் இருக்கின்றது. உணவும் அங்கு இல்லை, அதை வாங்குவதற்கான பணமும் அங்கு இல்லை."

ஒரு போராளி பேசுகிறார்:

"பொடியளைப் பற்றி யாராவது பயம் கொண்டிருந்தால் அவர் நிட்சயம் ஏதாவது குற்றம் செய்திருக்க வேண்டும். ஏனென்றால் இங்கே சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்துக் கொண்டிருப்பவர்கள் நாம்தாம்."

21 வயது லதா:

"மூன்று சகோதரர்களின் ஒருத்தியான லதாவின் கருத்து "எப்படியோ ஒவ்வொரு வீடும் ஒன்றோ அல்லது இரண்டோ பொடியளைக் கொடுத்திருக்கிறது. தற்போதைய சூழலில் செய்யக்கூடிய சரியான விஷயங்களை அவர்கள் செய்கிறார்கள் என உணர முடிகிறது."

பகவான். சிங் நான்கே நாட்களுக்குட்டமே ஈ.ழத்தில் தங்கினாலும் அவரது பார்வை கருத்தை தெளிவாகப் படம் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EPRLF

ஈழ மக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணியின்
மககள் விடுதலைப் படை
உங்களை அழைக்கிறது.
வாருங்கள் பகைவனை ஒழிப்போம்
வரலாறு படைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: தமிழ் ஈ.ம விடுதலைப் பேரவை. (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org